**கூட்டுறவு மிகை நிதியம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

கூட்டுறவு மிகை நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை. எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு**

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

**1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 4,757,296 கிரயத்திலான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்கள் நிதியத்தால் இன்னும் பயன்படுத்தப்படுகின்ற போதிலும், நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்காததுடன் | 2021 யூலை 31 இல் மீள்மதிப்பீடுகளை இறுதி செய்வதன் மூலம் கணக்குகள் சீர்செய்யப்பட்டிருந்தன. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நியமம் 3 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 13,163,369 ஆக நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் குறிப்பு 05 இன் கீழ் தொடர்புடைய விபரங்கள் காட்டப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்ட போதிலும் நியமம் 7 இன் 86 ஆம் பந்தியின் பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 யூலை 31 இல் மீள்மதிப்பீடுகளை இறுதி செய்த பின்னர் தயாரிக்கப்பட்ட பட்டியலில் சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டு சரியாக காட்டப்பட்டுள்ளன | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 189,001 கிரயத்திலான கணனி மென்பொருளானது நிதிக்கூற்றுக்களில் அருவச் சொத்துக்களாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த மென்பொருள் தற்போது பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்டுள்ளது, ஆகையால் அத்தகைய சொத்து பௌதீக ரீதியாக காணப்படவில்லை. குறித்த விடயம் கணக்காய்வினால் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் மீளாய்வாண்டிலும் அதனைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 யூலை 31 இல் மீள்மதிப்பீடுகளை இறுதி செய்வதன் மூலம் கணக்குகள் சீர்செய்யப்பட்டுள்ளன. | பௌதீக ரீதியாக கிடைக்கக்கூடிய சொத்துக்களாக உறுதிப்படுத்தப்பட்ட சொத்துக்கள் மாத்திரமே நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதி ரூபா 1,464,194 ஆக காணப்பட்ட போதிலும் இது நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 171,454 ஆல் குறைத்து ரூபா 1,292,740 ஆக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. | இது திருத்தம் செய்யப்பட்டு பின்னிணைப்பு 04 உடன் சேர்த்து நாட்குறிப்பு பதிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | கணக்குகளில் சரியான பெறுமதியை குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்திற்கு 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 20 மில்லியன் கடன் மீதி 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 14,680,976 மீதி 2017 ஆம் ஆண்டில் கடன்பட்டோராக பிழையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் குறித்த தொகையானது மேற்படி பிழையை சீர்செய்வதற்காக மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. | செயற்பாட்டிலுள்ள கடன் பதிவேட்டிற்கும் 2019 ஆம் ஆண்டு வரையிலான பட்டியலிற்கும் இடையில் வேறுபாடுகள் காணப்பட்டன, மேலும் இதனால் 2018 ஆம் ஆண்டின் கணக்குகள் குறித்த வேறுபாடு சீர்செய்யப்பட்டு மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்திற்கு 2013.12.06 இல் வழங்கப்பட்ட ரூபா 20 மில்லியன் கடன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் பட்டியலில் உள்ள பிழையை திருத்துவதற்காக மாத்திரமே இது மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பிழை ஏற்பட்ட ஆண்டை இனங்கண்டு அதற்கிணங்க தொடர்புடைய கணக்குகளில் சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.5.4 தொங்கல் கணக்கு

| விடயம் | தொகை<br>ரூபா | தொங்கலாக இருந்த காலப்பகுதி | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| தொங்கல் கணக்கு | 9, 475,735 | 21 ஆண்டுகள் | நீண்ட காலமாக முன்கொண்டுவரப்பட்ட குறித்த வேறுபாட்டை சீர்செய்வதற்கு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். | தொங்கல் கணக்கில் மீதியை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.5.5 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயங்கள் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | பெறவேண்டிய கூட்டுறவு சங்க கடன்கள் | 583,184,797 | மீதி உறுதிப்படுத்தல் | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டதுடன், 05 சங்கங்கள் மாத்திரமே அதற்குப் பதிலளித்திருந்தன. | மீதி உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கூட்டுறவு நிதியத்திலிருந்து | 5,029,486 | மீதி உறுதிப்படுத்தல் | மீதி உறுதிப்படுத்தலை பெற்று கணக்காய்விற்கு | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பெறவேண்டிய தொகை | | | சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | பெறவேண்டிய திறைசேரி கடன்கள் | 81,871,370 | மீதி உறுதிப்படுத்தல் | இவ் விடயத்தை உறுதிப்படுத்துவதற்கு திறைசேரி பிரதிச் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. | -மேற்படி- |
| (ஈ) | செலுத்த வேண்டிய திறைசேரி நிதி | 150,000 | மீதி உறுதிப்படுத்தல் | நிதிக் குழுவுக்கு அனுப்பி, அதற்கான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | -மேற்படி- |
| (உ) | செலுத்த வேண்டிய தேசிய நம்பிக்கைப்பொறுப்பு நிதி | 3,871,256 | மீதி உறுதிப்படுத்தல் | நிதிக் குழுவுக்கு அனுப்பி அதற்கான பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | -மேற்படி- |
| (ஊ) | பொது வைப்பு கணக்கு | 10,779,292 | விபரமான பட்டியல்கள் | விரைவாக சமர்ப்பிக்குமாறு உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | பட்டியல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | நிலையான வைப்பு உத்தரவாத கடன்கொடுத்தோர் | 58,918,112 | கடன் கோவைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல் | நடப்பாண்டு கணக்குகளை தயாரிக்கும் போது இதனை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | கடன் கோவைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தலை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | கலைத்தல் (Liquidated) கணக்குகள் (வரவு மீதி) | 2,620,473 | தயாரிக்கப்பட்ட கலைத்தல் கணக்கின் பிரதிகள் | நடப்பாண்டில் சமர்ப்பிக்குமாறு உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தப்பட்டது. | கலைத்தல் கணக்கின் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 177,467,827 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 192,948,274 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 15,480,447 தொகையான வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது. வட்டி வருமானம் ரூபா 2,002,364 ஆல் குறைவடைந்தமை மற்றும் ஏனைய செலவினம் ரூபா 12,741,591 ஆல் அதிகரித்தமை என்பன குறித்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பல்வேறு சொத்துக்களின் கீழ் சுட்டிக்காட்டப்பட்ட 1999 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட ரூபா 1,721,566 பெறுமதியான மதிப்பிழந்த காசோலைகளின் (dishonoured cheques) மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்ட காலமாக முன்கொண்டு வரப்பட்ட குறித்த மீதியை பதிவழிப்பதற்கு அமைச்சின் செயலாளரினால் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததனால் இது எதிர்காலத்தில் தீர்ப்பனவு செய்யப்படும். | மதிப்பிழந்த காசோலைகளின் மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதி நிலைமைக் கூற்றில் பல்வேறு பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மிகை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 6,017,551 மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு 1987 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்ட காலமாக முன்கொண்டு வரப்பட்ட குறித்த மீதியை பதிவழிப்பதற்கு அமைச்சின் செயலாளரினால் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததனால் அதற்கிணங்க இது எதிர்காலத்தில் தீர்ப்பனவு செய்யப்படும். | செலுத்த வேண்டிய தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | செலுத்தப்பட வேண்டிய பொறுப்புக்களின் கீழ் ரூபா 734,392 கூட்டுமொத்த தொகையாக குறிப்பிடப்பட்ட கலைக்கப்பட்ட சங்கங்களிலிருந்தான அறவீடுகள், மேலதிக அறவீடுகள், கூட்டுறவு நிதிய மேல் மாகாணம் மற்றும் கணக்குப் பரிமாற்றங்கள் போன்ற மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நீண்ட காலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவற்றை நிதிக் குழுவுக்கு அனுப்புவதன் மூலம் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | 2020 சனவரி 01 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 543,726,149 தொகையான செயற்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்ககங்களின் கடன் மீதியில் ரூபா 22,611,959 தொகை மாத்திரமே மீளாய்வாண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டில் பெறவேண்டிய ரூபா 164,595,101 கடன் வட்டியாயில் ரூபா 2,089,268 தொகை மாத்திரமே பெறப்பட்டிருந்தது. | பதினெட்டு கடன் கோவைகள் சட்டப் பிரிவிற்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக சம்பந்தப்பட்ட மாகாண கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவற்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (i) | 2012 ஆம் ஆண்டில் குருணாகல் கோப்பரேட்டிவ் ஹொஸ்பிட்டல் சொசைட்டி லிமிட்டட்டிற்கு புதிய கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக குறித்த கடன் மீதிகளில் உள்ளடங்கிய ரூபா 100 மில்லியன் கடன் வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் குறித்த கடனிலிருந்து ரூபா 1,898,184 தொகை மாத்திரமே அறவிட்பட்டுள்ளது. | கடன்கள் தொடர்பாக வட்டி நிவாரணம் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் கடன்களை மீள்பட்டியலிடுவதற்காக கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன. | -மேற்படி- |
| (ii) | 6 வருட காலத்திற்கு மேலாக முன்கொண்டுவரப்பட்ட பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 210,802,293 கடன் மற்றும் அது தொடர்பான ரூபா 87,119,041 தொகையான வட்டி என்பவற்றிலிருந்து எந்தத் தொகையையும் அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி முகாமைத்துவக் குழுவால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இக் கடன்களை மீள்பட்டியலிடுவதற்கு அல்லது உடன்படிக்கைகளின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. | -மேற்படி- |